2013 ஏப்ரல் 26]

331—

உண்டி, உறைவிடப் பள்ளி

***5737—திரு. ந. நஞ்சப்பன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெண்ணாகரத்திலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளை உண்டி, உறைவிடப் பள்ளிகளாக மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கல்வித் துறையின்கீழ் செயல்படுத்தப்படும் அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளி அல்லது ஆதி திராவிடர் நலத் துறையின்கீழ் செயல்படுத்தப்படும் நலப் பள்ளிகளை உண்டி, உறைவிடப் பள்ளிகளாக மாற்றம் செய்ய சாத்தியக்கூறுகளே இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரத்தைச் சுற்றியுள்ள 50–க்கும் மேற்பட்ட கிராமங்களிலிருந்து தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்களுடைய குழந்தைகள் பள்ளிக்கு வர வேண்டுமென்றால், 30, 40 கிலோ மீட்டர் தூரம் இரண்டு, மூன்று பேருந்துகளில் மாறி, மாறி பயணித்து வரவேண்டியிருக்கிறது. ஆகவே, அவர்கள் தங்கிப் படிக்கும் வகையிலே, பெண்ணாகரத்தில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகள், உண்டி, உறைவிடப் பள்ளிகளாக மாற்றித் தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மேலும், தளி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட உரிகம், கூட்டையூர் ஊராட்சிகளில் 40–க்கும் மேற்பட்ட மலைக் கிராமங்கள் உள்ளன. அதில் அதிகப்படியான பழங்குடி மக்களுடைய குழந்தைகள் பல கிலோ மீட்டர் தூரம் நடந்து பள்ளிக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, பழங்குடியின மக்களுடைய குழந்தைகள் எளிதாக கல்வி பயிலும் வகையிலே கூட்டையூரில் ஓர் உண்டி உறைவிடப் பள்ளியை இந்த அரசு அமைக்குமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் செயல்படுத்தப்படும் பழங்குடியினருக்கான உண்டி உறைவிடப் பள்ளிகள் மத்திய அரசின் நிதி உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட பள்ளிகளாகும். இருப்பினும், அரசுப் பள்ளிகளை உண்டி உறைவிடப் பள்ளிகளாக மாற்ற இயலாத நிலையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரும் பெண்ணாகரத்தில் உள்ள அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் அதிகமான மாணவ, மாணவியர்கள் படிக்கும் நிலையிருப்பின், அம்மாணவர்கள் தங்கள் கல்வியைத் தொடர்ந்திட, அப்பகுதியில் விடுதி ஒன்றினை அமைத்திடும் கருத்துருவினை மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று இவ்வரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 332, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாப்பா சுந்தரம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

332—

பேருந்து வசதி

***8909—திரு. அ. பாப்பா சுந்தரம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—